**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 211/2023**

திரு. கே.சிவக்குமார் (D.W –3) **09.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்னுடைய பிறந்த தேதி என்ன என்றால் 1968 ஆம் வருடம் பிறந்தேன். 1980 ஆம் வருடம் என்னுடைய வயது 12 என்றால் சரி. 1984 இல் என்னுடைய வயது 16 என்றால் ஆமாம். அந்த சமயத்தில் இருந்து கவுண்டம்பாளையத்தில் தான் வசித்து வருகிறீர்கள் என்றால் சரி. எந்த வருடம் எனக்கு திருமணம் நடந்தது என்றால் 1998 ல் நடந்தது. பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் என்னுடைய மாமனார். அவர் அழைத்து சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் இல்லை. இரண்டு பேருமே எனக்கு மாமனார் முறை தான் வேண்டும்.

2. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வந்ததா என்றால் இல்லை. யார் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் பிரதிவாதி பழனிசாமி அழைத்ததால் சாட்சி அளிக்கிறேன். க.ச.எண்.378/1 ஏ, 378/1 பி ஆகிய சொத்துக்களின் செக்கு பந்தி தெரியுமா என்றால் தெரியும். 378/1 சி கிழக்குபுறம் ஈஸ்வரன் சொத்து, தென்புறம் பழனிச்சாமி சொத்து, மேல்புறம் பொது பாறை, பொது இடம், வடபுறம் ஈஸ்வரன் சொத்து உள்ளது.

3. மேலே சொன்ன சர்வே எண் சொத்துக்களை என்னுடைய மாமனார் பிரதிவாதி கிரயம் பெற்ற சமயத்தில் நான் இளவராக இருந்துள்ளதால் எனக்கு அது பற்றி தெரிய வாய்ப்பில்லை என்றால் தவறு. என்னுடைய மாமனார் எனக்கு பழைய உறவு அதனால் தெரியும். அந்த சமயத்தில் எனக்கு

திருமணமும் ஏற்படவில்லை. அதனால் தெரிய வாய்ப்பில்லை என்றால் தவறு. இரண்டு பேரும் தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுடைய பூமி விவரங்கள் எனக்கு தெரியும்.

4. க.ச.எண்.378/1 ஏ,1 பி,1 சி சொத்துக்களை என்னுடைய மாமனார் பிரதிவாதி கிரயம் பெறுவதற்கு முன்பு அந்த சொத்துக்களுக்கு செல்வதற்கு என்ன பாதை என்றால் பாதையே இல்லை. மேற்படி சொத்துக்களுக்கு தென்புறம் கிழமேல் பாதை இருந்தது பாதை இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தென்புறம் உள்ளது. என்னுடைய மாமனாரின் சொத்து என்பதால் மேலே சொன்ன சொத்துக்கள் ஒட்டி வருவதால் அவர் கிரயம் பெற்றார். க.ச.எண் 378/1 சிக்கு 378/1 பி, 378/1 ஏ சொத்துக்களின் வழியாக கிழக்கு சென்று அடைய முடியும் என்றால் தவறு. அந்தமாதிரி பாதை இல்லை. இந்த பூமி பாறை பூமி என்று சாட்சி தன்னிச்சையாக முன்வந்து கூறுகிறார். பாறை சொத்துக்களில் குவாதி தொழில் செய்து வந்தார்களா என்றால் இல்லை. பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்காக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

5. க.ச.எண் 378/1 சி சொத்தை சென்று அடைவதற்கு வேறு பாதை பூமி உள்ளதா என்றால் இல்லை. க.ச.எண் 378/1b சொத்தை என்னுடைய மாமனார் 1980 ஆம் வருடமும் க.ச.எண். 378/1 ஏ சொத்தை 1984 வருடமும் கிரையம் பெற்ற பிறகு தற்போது க.ச.எண்.3781 சி சொத்தை அடைவதற்காக பாதை இல்லை என்று அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாதை இல்லை என்று சொன்னால் அந்த சொத்தை வாதிகளிடமிருந்து கிரயம் பெற்றுக் கொள்ளலாம் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. சாட்சி தனிச்சியாக முன்வந்து பழனிச்சாமி வாங்குவதாக எண்ணமே இல்லை என்னிடம் அவ்வாறு சொல்லி உள்ளார்.

6. பிரதிவாதி என்னுடைய மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என்னுடைய மாமனார் கிரையம் பெற்ற சொத்துக்களின் ஆவணங்களை பார்த்து உள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த பத்திரங்களில் மாமூல் நடை பாதை என்று குறிப்பிட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் சரி. பொதுவாக எல்லா ஆவணங்களிலும் எழுதுவது போல் எழுதி விட்டார்கள். பாதையைப் பற்றி குறிப்புகள் குறிப்பாக இல்லை. பாதை பூமியில் உள்ளது. அதை மறைத்து என்னுடைய மாமனார் பிரதிவாதி எதிர்வாதம் செய்து வருகிறார். அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

7. தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையாளர் நேரில் பார்வையிட்டு அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்துள்ளார். அதைப்பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு விவரங்களை எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு விபரங்கள் தெரியும் என்று முதல் விசாரணையில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் தவறு.

| |
|---|
| சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.<br><br>ஒம்/-கே.ஆர்.கண்ணன்<br>கூடுதல் சார்பு நீதிபதி,<br>திருப்பூர். |